அவர்கள் அந்தப் பகுதிகளையெல்லாம் பார்வையிட்டார்கள். அப்போது உயிர்களை காபந்து பண்ணியவர்களுக்கெல்லாம் அன்றைய தினம் அதற்கான சன்மானங்களை எல்லாம் வழங்கினார்கள். நான் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரத்திற்குச் சென்றபோது உலகநாதன் பற்றி சொன்னார்கள். உலகநாதனுக்கு சன்மானம் கிடைக்காமல் விடுபட்டுப் போய்விட்டது என்று நான், கவர்னர் உரையில் பேசியபோது இங்கே குறிப்பிட்டேன். இன்றையதினம் அவருக்கு 10 ஆயிரம் ரூபாய் சன்மானம் அளித்து (மேசையைத் தட்டும் ஒலி) அவரைப் பாராட்டி,-அவருடைய பேரன் எம்.ஏ. படித்து இருக்கிறார்-அவருடைய பேரனுக்கும் வேலை வழங்குவதாக இங்கே வாக்குறுதி தந்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதற்காக அவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. பேரவை விதி 110-ன் கீழ் அறிக்கை

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப் பட்டுள்ளது குறித்து, பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன் கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கை வைக்க மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரி இருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கி இருக்கிறேன். அந்த அறிவிப்பை இந்தப் பேரவைக்கு வெளியிடுவார்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமும் தமிழக மக்களும் அனைத்து நிலைகளிலும் முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற உன்னதமான எண்ணத்தோடு நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பிற்படுத்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் காவல் தெய்வமாகவும் சமூக நீதிக் காவலராகவும் இன்றைக்குத் திகழ்ந்து வருகிறார்கள். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மூன்றாவது பிற்பட்டோர் நலக் குழு அமைப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்கள். அந்த அறிவிப்பின் அடிப்படையிலும், மண்டல் குழு அறிக்கை மீதான உச்ச நீதி மன்றத் தீர்ப்பின் அடிப்படையிலும் நிரந்தரமான பிற்பட்டோர்

[திரு. டி. ஜெயகுமார்] [1993 மார்ச் 16

நலக் குழு அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இது குறித்து விதி 110-ன் கீழ் அறிக்கை ஒன்றினை சட்டமன்றப் பேரவைமுன் சமர்ப்பிக்கிறேன். அந்த அறிக்கையின் விவரங்கள்.

மண்டல் குழு பரிந்துரைகள் மீதான வழக்குகளில் இந்திய உச்ச நீதிமன்றம் பிறப்பித்த ஆணைக்கிணங்க தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் ஒன்றினை ஏற்படுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். இந்த ஆணையத்தின் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி திரு. கே. சண்முகம் அவர்கள் இருப்பார்கள்.

இந்த ஆணையத்தில் திரு. ஆர். செல்லமுத்து, இ.ஆ.ப., உறுப்பினர்-செயலர் ஆகவும், திரு. யு.எஸ். நடராஜன், இ.ஆ.ப. (ஓய்வு) உறுப்பினராகவும், திரு. மாணிக்கவேல், இ.ஆ.ப. (ஓய்வு) உறுப்பினராகவும், டாக்டர் சி. முருகதாஸ், பொருளாதாரப் பேராசிரியர் அவர்கள் உறுப்பினராகவும், திரு. சி. முத்துசாமி, இ.ஆ.ப. (ஓய்வு) உறுப்பினராகவும், டாக்டர் டி. சுந்தரம், சமூகவியல் பேராசிரியர், உறுப்பினராகவும் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் ஆகியோர் அலுவல் சார்ந்த உறுப்பினர்களாக இருப்பார்கள்.

முற்பகல் 11.15

இவ்வாணையத்தின் அலுவல் ஆய்வு வரம்புகள் பின்வருமாறு:

பிற்படுத்தப்படோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கைகள், அப்பட்டியலில் கூடுதலாக சேர்க்கப்பட்டது மற்றும் சேர்க்கப்படாமல் விடுபட்டது குறித்த புகார்கள் ஆகியவற்றைப் பற்றி பரிசீலித்து பரிந்துரைகள் வழங்கும்.

(2) மாநிலத்திலுள்ள பிற்படுத்தப் பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப் பட்டோர் பட்டியல்களில் மறுஆய்வு மேற்கொள்ளும்.

(3) இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 16 (4) ஆகியவற்றிலுள்ள காப்புரைகளுடன் தொடர்புடைய இதர காப்புரைகள் மற்றும் இப்பொருள் மீதான இந்திய உச்ச நீதிமன்றத்தின் பல்வேறு முடிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தக் குழு தனது பரிந்துரைகளை அளிக்கும்.